**தலைப்பு 332 – தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு – 332 – தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 244.93 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 149.34 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 95.59 மில்லியன் அதாவது 39.03 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 44.93 | 39.84 | 5.09 | 11.33 |
| மூலதனம் | 200.00 | 109.50 | 90.50 | 45.25 |
| மொத்தம் | 244.93 | 149.34 | 95.59 | 39.03 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 33201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1,000,000 | 658,516 | 200,000 | 585,782 | 3,000,000 | 2,002,100 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ஆ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 50,000 மொத்த தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஐந்து செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 40 சதவீதம் முதல் மற்றும் 97 சதவீதமான வரையான வீச்சினைக் கொண்டிருந்தன.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

33201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உறுப்பினர் கடன் பதிவேட்டின் மீதி மற்றும் அத்திகதியில் உள்ளவாறான திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரமான மீதிக்குமிடையே ரூபா 92,616 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஆ) உறுப்பினர் கடன் பதிவேட்டில் (CC10) உள்ளடக்கப்பட்ட ரூபா 215,000 தொகையான இரண்டு கடன் மீதிகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றில் பின்னிணைப்பு II இல் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், திணைக்களத்தின் காசேட்டின் பிரகாரம் அம்மீதியை கையேற்பதற்கு வெளி நிறுவனமொன்றுக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) முற்பணக் கணக்கில் ஒவ்வொரு ஆண்டிற்குரிய மொத்த செலவினம் திணைக்கள பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 658,516 மற்றும் திறைசேரி கணனி அச்சீட்டு

அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,478,712 ஆக இருந்த காரணத்தினால் திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் ரூபா 820,196 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.4.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 திசெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ் அறிக்கை 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

திணைக்களத்தின் 47 வாகனங்கள் விளைவற்று அல்லது குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டன.

**(ஆ) ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

திணைக்களத்தினால் ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான ரூபா 19,487,779 கூட்டுத்தொகையான 12 வாகனங்கள் முறையான அங்கீகாரமொன்றில்லாமல் மீளாய்வாண்டில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

### 3.6 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

2015 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் மொத்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் இலங்கை முழுவதும் 3,666 சமுதாய அடிப்படை அமைப்புக்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அதில் 1,260 ஆண்டின் இறுதி வரையிலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக செயற்படாமை**

2015 சனவரி மாதத்திலிருந்து நவம்பர் 15 ஆந் திகதி வரை 11 ½ மாத காலப்பகுதியில் சமுதாய அடிப்படை அமைப்புக்களுக்காக 37 பராமரிப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதில் 11 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்த போதிலும், நிகழ்ச்சித்திட்டங்களின் 70 சதவீதம் மாத்திரம் நிறைவேற்றப்படாமல் இருந்தன.

**(இ) செயற்பாடற்ற நீர்ச் செயற்திட்டங்கள்**

18 மாவட்டங்களில் 393 செயற்பாடற்ற நீர் செயற்திட்டங்கள் காணப்படுவதாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 05 | 19 |
| (ii) | மூன்றாம் நிலை | 307 | 46 | 261 |
| (iii) | இரண்டாம் நிலை | 54 | 34 | 20 |
| (iv) | ஆரம்ப நிலை | 70 | 39 | 31 |
| | மொத்தம் | 455 | 124 | 331 |